# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1658/39 - 2010 ජූනි 20 වැනි ඉරිදා - 2010.06.20

*1658/39ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*கட்டளை இல. 13.*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

*20 (5) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20 (5) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, உற்பத்தியாளர், வியாபாரி, இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர் எவரும் கீழே தரப்பட்டுள்ள ஆகக்கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேல் ஏதேனும் முழு ஆடைப்பால் மாவினை விற்பனை செய்யவோ, விற்பனைக்கு வைக்கவோ அல்லது விற்பனைக்கு கோரவோ அல்லது விற்பனைக்காகக் காட்சிப்படுத்தவோ முடியாதெனக் கட்டளையிடுகின்றது.*

| | ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா சதம் |
|---|---|
| *400 கிராம் முழு ஆடைப்பால்மா பைக்கற்* | *244.00* |
| *1 கிலோ கிராம் முழு ஆடைப்பால்மா பைக்கற்* | *598.00* |

*மேலே தரப்பட்டுள்ள பைக்கற் அளவுகள் தவிர்ந்த ஏனைய அனைத்து முழு ஆடைப்பால்மா பைக்கற் அளவுகள் 100 கிராம் 61 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யப்படலாகாது.*

*பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது 2009, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1627/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்ற பால்மாவின் ஆகக்கூடிய சில்லறைவிலையை நிர்ணயித்த 9 ஆம் இலக்க கட்டளையை இக்கட்டளையினால் இரத்து செய்கின்றது.*

*பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,*

*ரூமி மர்சூக்,*
*தவிசாளர்.*

*கொழும்பு,*
*2010, யூன் 20.*

*7 - 187*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*